செ.வெ.எண்:17 நாள்:06.04.2017

**திருநெல்வேலியில் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு மேல்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான வழிகாட்டல் பயிற்சி கையேட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

-----

திருநெல்வேலி பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளியில் 10ம் மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பயிற்சி கூட்டம் இன்று (06.04.2017) நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 10 மற்றும் 12 ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி கையேட்டினை வெளியிட்டார். இந்த விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.விக்ரமன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆப., அவர்கள் வழிகாட்டல் பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது :-

பள்ளிக் கல்வித்துறையின் மூலம் 10 மற்றும் 12 ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு மேற்படிப்பு படித்தல் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பயிற்சி திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றிய அளவில் 21 இடங்களின் நடத்தப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய அளவில் இன்று 10 இடங்களிலும், நாளை (07.04.2017) 11 இடங்களிலும் வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு வாய்புகள் அதிகம் உள்ளது. ஒவ்வெரு மாணவ, மாணவியரும் தம் என்னவாக வேண்டும் என்ற குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தமது திறமை என்ன என்பதை இனம் கண்டு குறிக்கோளை மிக துல்லியமாக நிர்ணயிக்க வேண்டும்.

தமிழக பள்ளிகளில் இன்று கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. மேலும் மாணவ, மாணவியர்களுக்கு புத்தகம், நோட்டு, சீருடை, சைக்கிள், மடிகணினி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் நீங்கள் சிறப்பாக கல்வி பயில வேண்டும் என்பதற்காக வழங்கப்படுகிறது. தன்னை வெல்பவனே தரணியை வெல்ல முடியும் என்பதை நீங்கள் உணர்ந்து குறிக்கோள்களை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். விட முயற்சியும், கடுமையான உழைப்பும் தான் வெற்றி வாய்ப்பை அளிக்கும் வழிகாட்டுதல் வகுப்புகளில் அனுபவம் மிக்கவர்களால் சொல்லப்படும் கருத்துகளை உள் வாங்கி சிறந்த கல்வி கற்று அனைவரும் சிறப்பாக செயல்பட்டு வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகிறேன். என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.சுவாமிநாதன், அண்ணா பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் சக்திநாதன், அரசு மருத்துவ கல்லூரி பேராசிரியர் டாக்டர் மார்த்தாண்டம், முன்னோடி வங்கி மேலாளர் திரு.அழகர்சாமி, மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் திருமதி. பாலா மற்றும் அலுவலர்கள் மற்றும் திருநெல்வேலி நகர பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.